**<u>சுருக்கம்</u>**

பேருந்து நிலையம் – திண்டிவனம் நகராட்சி – திண்டிவனம் ஏரியில் பேருந்து நிலையம் அமைப்பதை எதிர்த்து தொடரப்பட்ட ரிட் மனுக்கள் 19388/06 மற்றும் 7243/07 மீது நீதிமன்றம் 22.07.09–ல் வழங்கிய தீர்ப்பினடிப்படையில் பேருந்து நிலைய அமைவிடத்தை உறுதிசெய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

-------------------------------------------------------------

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை**

அரசாணை (நிலை) எண். 191 நாள் 12.10.2009

படிக்கப்பட்டது:

1. தென்னாற்காடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக கடிதம் எண்.49733/பிடி2/91, நாள் 06.11.91, நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முகவரியிடப்பட்டது.
2. திண்டிவனம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.9238/91/எப்1, நாள் 20.01.94.
3. விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலரின் கடிதம் மு.மூ.அ6/7493/93, நாள் 29.03.95.
4. திண்டிவனம் வட்டாட்சியரின் கடிதம் அ1/4784/97, நாள் 12.2.98.
5. திண்டிவனம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.9238/91/எப்1, நாள் 05.10.98.
6. திண்டிவனம் வருவாய் கோட்டாட்சியர் கடிதம் அ3/127/98, நாள் 08.11.99.
7. விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் கடிதம் அ4/25791/97, நாள் 10.01.2000.
8. சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையரின் கடிதம் எண்.ப.மு(பி3)/4419/2000, நாள் 11.5.2000.
9. அரசாணை (நிலை) எண்.101, வருவாய்த்துறை, நாள் 05.03.2001.
10. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க. எண்.49944/2003/டிபி2, நாள் 19.08.2005.
11. அரசாணை (நிலை) எண்.136, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 15.09.2005.
12. அரசாணை (நிலை) எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் நாள் 17.02.2006.
13. ரிட்மனுக்கள் 19388/06 மற்றும் 7243/07 மீது நீதிமன்றம் வழங்கிய 22.07.2009 நாளைய தீர்ப்பு.
14. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.40944/03/டிபி2, நாள் 12.08.2009.
15. அரசாணை(நிலை) எண்.258, வருவாய்த்துறை, நாள் 18.05.2007.
16. அரசாணை (நிலை) எண்.602, வருவாய்த்துறை, நாள் 19.10.2007.
17. ரிட்மனு எண்.26314/07 மீது நீதிமன்றம் வழங்கிய 09.09.2008 நாளைய தீர்ப்பு.

-------------

த.பி.பா.

**ஆணை:-**

திண்டிவனம் நகரில் தற்போதுள்ள பேருந்து நிலையத்தின் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக கூடுதல் வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியது அவசியம் என கருதப்பட்டதால், புதிய பேருந்து நிலையத்திற்கு தேவையான இடத்தினை தேர்வு செய்வதற்காக அப்போதைய தென்ஆற்காடு மாவட்ட ஆட்சியர் 25.10.91ல் திண்டிவனம் நகரை நேரடியாக ஆய்வு செய்த பின்பு முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் நீர்நிலையாக பயன்பாட்டில் இருந்த திண்டிவனம் ஏரிப் பகுதி, புதிதாக பேருந்து நிலையம் அமைப்பதற்கு அனைத்து வகைகளிலும் உகந்ததாக உள்ளது என நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெரிவித்தார். இதனடிப்படையில் திண்டிவனம் ஏரிப் பகுதியை புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்து தரவும், அதற்கு முன்பாக அவ்விடத்தில் நகராட்சி நிர்வாகம் மேற்படி பணிக்காக முன்நுழைவு செய்ய அனுமதி பெற்றுத்தருவதற்கும் மாவட்ட ஆட்சியரை கேட்டுக் கொள்ளலாம் என திண்டிவனம் நகர்மன்றம் தீர்மானம் எண்.400, நாள் 27.11.91ல் தீர்மானம் நிறைவேற்றியது. இதனை தொடர்ந்து திண்டிவனம் நகராட்சி ஆணையர் இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மேற்குறிப்பிட்ட நிலப் பகுதியை புதிய பேருந்து நிலையம் அமைக்க நில உரிமை மாற்றம் செய்து தருமாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு செயற்குறிப்பினை சமர்ப்பித்தார். ஆனால், நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என அறிவுறுத்தங்கள் நடைமுறையில் இருந்ததால் திண்டிவனம் நகருக்கான புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு வேறு தகுதியான புறம்போக்கு நிலத்தினை தேர்ந்தெடுக்குமாறும் இதுகுறித்து வருவாய் வட்டாட்சியரை கலந்து முடிவு செய்து அதன் பின்பு நில உரிமை மாற்றம் தொடர்பான கருத்துருவினை சமர்ப்பிக்குமாறும் விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர் மூன்றாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் திண்டிவனம் நகராட்சி ஆணையரை கேட்டுக் கொண்டார். எனினும், திண்டிவனம் நகர்மன்றத் தீர்மானம் எண்.612 நாள்07.03.97ன்படி திண்டிவனம் ஏரிப்பகுதியில் தேசிய நெடுஞ்சாலையையொட்டி பேருந்து நிலையம் அமைக்க தகுதியான வேறு அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை என்பதால், திண்டிவனம் ஏரி நிலத்திலே புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு நகராட்சி ஆணையர் மாவட்ட வருவாய் அலுவலரை கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து திண்டிவனம் வட்டாட்சியர் நான்காவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், திண்டிவனம் ஏரிப் பகுதியை நில உரிமை மாற்றம் கோரும் புதிய செயற்குறிப்பினை அனுப்பிவைக்குமாறு திண்டிவனம் நகராட்சி ஆணையரை கேட்டுக் கொண்டார். அதனடிப்படையில், திண்டிவனம் நகரமன்றத்தின் ஒப்புதலை பெற்று சர்வே எண்.33/4ல் மற்றும் 36/5ல் அமைந்துள்ள திண்டிவனம் ஏரியின் 5 ஏக்கர் நிலம் மற்றும் 1 ஏக்கர் தோப்பு புறம்போக்கு நிலம் ஆகியவற்றை புதிய பேருந்து நிலையம் அமைக்க திண்டிவனம் நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக் கொண்டு உரிய செயற்குறிப்பு வட்டாட்சியர் மூலம் மாவட்ட ஆட்சியருக்கு ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2. இச்செயற்குறிப்பிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் ஆட்சேபணை தெரிவித்ததால் இப்பொருள் குறித்து விவாதிக்க திண்டிவனம் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் பல்வேறு துறைகளை சேர்ந்த 23 அலுவலர்களை கொண்ட கூட்டம் 30.10.99ல் நடைபெற்றது. அரசு போக்குவரத்து கழக அலுவலர்கள், தனியார் பேருந்து இயக்குபவர்கள் மற்றும் நகரின் முக்கிய பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். விரிவான கலந்துரையாடலுக்குப் பின் அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திண்டிவனம்

வருவாய் கோட்டாட்சியர் ஆறாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் திண்டிவனம் நகருக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க திண்டிவனம் ஏரிப்பகுதியே அனைத்து வகையிலும் சிறந்ததாக கருதப்படுகிறது என்றும் எனவே, இவ்விடத்தில் நகராட்சி முன்நுழைவு செய்ய அனுமதி வழங்கலாம் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்தார். இச்செயற்குறிப்பினை பரிந்துரை செய்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் மூலம் அரசு வருவாய் துறைக்கு அனுப்பி வைத்தார். சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் எட்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் இச்செயற்குறிப்பினை தனது பரிந்துரையுடன் அரசு வருவாய்த் துறைக்கு அனுப்பி வைத்தார். அரசு, இச்செயற்குறிப்பினை ஆய்வு செய்தபின்பு திண்டிவனம் ஏரிப்பகுதியில் சர்வே எண்.33/4 மற்றும் 36/5ல் அமைந்துள்ள 5 ஏக்கர் நிலப்பகுதி மற்றும் 1 ஏக்கர் தோப்பு புறம்போக்கு நிலத்தினை, நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என நடைமுறையில் இருக்கும் தடைக்கு விலக்களித்து திண்டிவனம் நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து ஒன்பதாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வரசாணையில், நிலத்திற்கான கிரையத் தொகையாக ரூ.12,79,488ம் மற்றும் அந்நிலத்தில் அமைந்துள்ள மரங்களுக்கான தொகையாக ரூ.1361ம் நகராட்சி செலுத்த வேண்டுமென்றும் அந்நிலம் பேருந்து நிலையம் அமைப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்டவாறு தொகை செலுத்தப்பட்டதால் அந்நிலம் திண்டிவனம் நகராட்சியிடம் 14.01.2003ல் ஒப்படைக்கப்பட்டு இன்றுவரை நகராட்சிவசம் உள்ளது.

3. இதற்கிடையில், திண்டிவனம் நகரமன்றத்தின் துணை தலைவர் மற்றும் 18 நகரமன்ற உறுப்பினர்கள், கிடங்கல் கிராமத்தில் உள்ள வக்பு வாரியத்திற்கு சொந்தமான நிலத்தினை குத்தகை அடிப்படையில் பெற்று பேருந்து நிலையம் அமைக்கலாம் என நகரமன்ற தலைவரை கேட்டுக் கொண்டனர். இதனை ஏற்று, நகரமன்றம் தீர்மானம் எண்.458 நாள் 30.09.2004–ல் தீர்மானம் நிறைவேற்றியது. மேலும், தீர்மானம் எண்.395, நாள் 17.08.2005–ல் வக்பு வாரிய நிலத்தை ரூ.60,000/– மாத வாடகைக்கும், ரூ.6,00,000/– முன்பணம் செலுத்தியும் குத்தகைக்கு பெற நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில், சர்வே எண்.202 கிடங்கல் கிராமத்திலுள்ள வக்பு வாரியத்தின் 6 ஏக்கர் நிலத்தினை, பேருந்து நிலையம் அமைக்க குத்தகை அடிப்படையில் பெற அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையரால் பத்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. அச்செயற்குறிப்பினை ஏற்று, பதினொன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வரசாணையில், வக்பு வாரியத்தின் நிபந்தனைப்படி முதலில் வக்பு வாரிய நிலத்தினை 3 வருட குத்தகைக்கு பெறவும், அவ்வாறு 25 தடவை குத்தகையை நீட்டிப்பதற்கும், அவ்விடத்திற்கு மாத வாடகையாக ரூ.60,000/– நிர்ணயம் செய்தும் மற்றும் முன்பணமாக ரூ.6,00,000/– வக்பு வாரியத்திற்கு செலுத்தவும் நகராட்சிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. மேலும், அவ்வரசாணையின்படி வக்பு வாரிய நிலத்தினை குத்தகைக்கு பெற தயாரிக்கப்பட்ட 22.12.2005 நாளிட்ட ஒப்பந்தப் பத்திரத்தில், வருடத்திற்கு வாடகை தொகையில் ஐந்து சதவிகிதம் வாடகை உயர்வு செய்யவும் முன்பணத் தொகையை அதிகரித்துக் கொள்ளவும் வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அந்த ஒப்பந்தத்தில் வக்பு வாரிய நிலத்தில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை நகராட்சி நிர்வாகமே தனது சொந்த செலவில் அகற்ற வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதற்கான அனுமதியை, நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்தோ அல்லது மன்றத்திடமிருந்தோ பெறவில்லை. இதனை

தொடர்ந்து பன்னிரெண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வக்பு வாரிய இடத்தில் ரூ.522.00/– இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி அளித்து ஆணைகள் வெளிளியடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், நகரமன்ற தீர்மானம் எண்.671 நாள் 13.06.2006ல், அரசாணை (நிலை) எண்.101, வருவாய் துறை 05.03.2001ல் அனுமதி வழங்கப்பட்ட திண்டிவனம் ஏரிப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கலாம் என்றும், வக்பு வாரிய நிலத்தினை குத்தகைக்கு பெற்று பேருந்து நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்ட அரசாணை(நிலை) எண்.136, ந.நி. (ம) கு.வ. துறை, நாள் 15.09.2005–ஐ ரத்து செய்யக் கோரலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

5. மீண்டும் திண்டிவனம் ஏரியில், பேருந்து நிலையம் அமைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையினை ஆட்சேபித்து, திரு.எஸ். வெங்கடேசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (ரிட் மனு எண்.19388/2006) தொடர்ந்தார். இதே கோரிக்கையுடன் திரு கே.வி.என்.வெங்கடேசன் என்பவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண்.7243/2007ல் வழக்கு தொடர்ந்தார். அவ்வழக்குகள் மீது சென்னை உயர்நீதிமன்றம் 22.07.2009ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கியது.

> “In view of the two Government Orders already in force, the Government to make a final decision one way or the other. The court cannot substitute its view as to which Government Order will be more appropriate and should be followed. The Government itself is not definite in its decision. Courts will not supplement its view as to how the Government should proceed in the matter.
>
> In view of the above, at this juncture, this court is not inclined to interfere with the resolution of the third respondent municipality or direct the Government to implement a particular G.O. We make it clear that the Government will consider the entire issue afresh and pass an appropriate order taking into consideration the earlier G.O.Ms.No.101 dated 05.03.2001 and the recent G.O.Ms.No.136 dated 15.09.2005 and the various resolutions passed by the third respondent municipality and decide the third respondent’s plea for putting up the bus stand. The government while considering this issue has to deal with all aspects that have been highlighted before this court, particularly, the protection of water bodies pollution and allied issues. Till such final decision is taken by the Government, no further steps should be taken for construction of the bus stand.
>
> Since the matter is relegated to the Government for its decision, this court is not inclined to issue a writ of mandamus to implement the G.O.Ms.No.136 dated 15.09.2005. The prayer for declaration also stands rejected for the above said reasons. This Court is, however, inclined to issue a mandamus to the first respondent Government to pass appropriate orders as indicated above. Both the writ petitions are disposed of accordingly.”

6. இதுகுறித்து நகராட்சி நிர்வாக இயக்குநரை கலந்தாலோசித்ததில் அவர் பதினான்காவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், திண்டிவனம் ஏரிப் பகுதி திண்டிவனம்

நகரத்தின் வெளியிலும் அதேவேளையில் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகிலும் அமைந்துள்ளதால் இவ்விடம் புதிய பேருந்து நிலையம் அமைக்க அனைத்து வகையிலும் பொருத்தமானது என திண்டிவனம் நகராட்சி ஆணையர் மற்றும் வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர் கருத்து தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், இதே விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், முண்டியம்பாக்கம் கிராமம் சர்வே எண்.144/1, 149, 155/1 மற்றும் 155/2 அமைந்துள்ள 18.20.0 ஹெக்டர் நிலத்தினை, நீர்நிலை புறம்போக்கு நிலங்களை ஒப்படை / நில மாற்றம் செய்யக்கூடாது என்ற தடையாணையிலிருந்து விலக்களித்து, மருத்துவக் கல்லூரி அமைக்க மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு முன்நுழைவு அனுமதி வழங்கி பதினைந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் பின்னர், பதினாறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி நிலங்களை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு நிலமாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் இதனை எதிர்த்து திரு.கே. பாலமுருகன் மற்றும் சிலரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் (ரிட் மனு எண்.26314/2007) நீதிமன்றம் 09.09.2008ல் வழங்கிய தீர்ப்பில் முண்டியம்பாக்கம் ஏரிப்பகுதியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதால் அந்த ஏரியின் சுற்றுப்புறம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் உறுதிளிக்கப்பட்டதால் பொதுமக்கள் நலன் கருதி அவ்விடத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதி வழங்கப்பட்டது என்றும் மருத்துவக் கல்லூரியும் அதனுடன் கூடிய மருத்துவமனையும் தற்போது அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

7. மேற்படி, ரிட் மனு எண்.26314/2007–ல் சென்னை உயர்நீதிமன்றம் 09.09.2008–ல் வழங்கிய தீர்ப்பின் சில பகுதிகள் கீழே உள்ளன.

"44. Having bestowed our thoughtful consideration to the various submissions and other relevant factors involved in this case, we are of the clear opinion that the attempt of the state Government in establishing the Medical College with an attached Hospital in the proposed site at Mundiambakkam lake, cannot be interfered with by this Court.

45. We find that though Mundiambakkam lake is a classified water body it was solely dependent on the discharge of excess water from Orathur lake. We are also convinced that at least for more than 15 years there was no storage of water in the so called lake x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x As the Mundiambakkam lake has now become obsolete in so far as water storage purpose is concerned and the Ayacutdharas have also reconciled to the position that they can no longer depend on the water supply by making their own arrangement of erecting bore wells and open wells, the State Government's endeavour to put the said barren land for better use, namely for the construction of a Medical College, with an attached full fledged Hospital in public interest, should not be scuttled. Our above conclusion is in tune with the decisions of the Hon'ble Supreme Court as enunciated in 'Intellectuals Forum case 'Susetha' and 'T.N.Godavarman Thirumulpad (104) reported in 2006 (3) SCC 549, 2006 (6) SCC 543 and 2008 (2) SCC 222 respectively.

46 x x x x x x x x x x x x x x x it will have to be held that the attempt of the District Authorities as well as the State Government proposing to convert the Mundiambakkam lake as a full fledged specially Medical College Hospital with all facilities as a prudent step in the right direction in the interest of public at large. Such a step in our considered opinion would be in tune with the concept of 'Sustained Development without infringing of causing any impact on the environmental set up or injuring the ecological set up. Mustering all our courage, we state that by applying the principles of "Sustained Development" which has now come to stay and by striking a balance as between the said concept viz-a-vis the environmental protection, we will be justified in affirming the action of the State in proceeding with its attempt to set up a Medical College and Hospital in the lake site. We say so because having been convinced that the so called lake has ceased to be a lake for nearly 15 years which has also provided some scope for encroachment as has been pointed out by the District Administration, If the State Government is not allowed to develop the said property in a fruitful manner it may ultimately go into the hands of unscrupulous elements who may try to grab the lands for their personal ends. The Court cannot shut its eyes to such hard realities taking place which will not be in the interest of public at large.

47. x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x 48. x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x 49. x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x 50. x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x

51. We are therefore convinced that the Government Orders by which the lands in Survey Nos.144/1, 149, 155/1 and 155/2 at Mundiambakkam Village, Villupuram Taluk and District and other vayakals i.e. Channel were indentified for locating the Government Medical College and Hospital and the subsequent Government Order G.O.Ms.No.258, Revenue Department, dated 18.05.2007, in transferring the said land in favour of the Health and Family Welfare Department for establishing the Medical College and hospital as well as the subsequent changes carried out in the village / Taluk accounts regarding the land transfer to the Government Medical College, Health and Family Welfare Department are fully justified and the same have been carried out in the larger public interest as a part of implementation of 'Sustainable Development' policy without in any way encroaching upon the maintenance or disruption of ecological balance."

**8.** எனவே, ஏற்கெனவே திண்டிவனம் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் **30.10.99**ல் நடைபெற்ற கூட்டத்தில் திண்டிவனம் ஏரிப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதே சிறந்தது என முடிவு எடுக்கப்பட்டுள்ளதாலும், இக்கருத்தினை திண்டிவனம் நகராட்சி ஆணையர் மற்றும் வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர் வலியுறுத்தியுள்ளதாலும் கீழ்க்கண்டவற்றின் மீது ஆணைகள் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.பி.பா.

1. திண்டிவனம் நகராட்சிக்கு அரசாணை (நிலை) எண்.101, வருவாய்த்துறை நாள் 05.03.2001–ல் நீர்நிலை புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்ய விதிக்கப்பட்டுள்ள தடையிலிருந்து விலக்களித்து அனுமதிக்கப்பட்டவாறு அனைத்து வகையிலும் பொருத்தமான திண்டிவனம் ஏரிப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்குதல்; மற்றும்

2. வக்பு வாரியத்திற்கு சொந்தமான நிலத்தினை குத்தகைக்கு பெற்று புதிய பேருந்து நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.136, ந.நி. (ம) கு.வ. துறை, நாள் 15.09.2005ஐ ரத்து செய்தல்.

மேற்குறிப்பிட்டவாறு ஆணைகள் பெற்ற பின்பு பேருந்து நிலையம் அமைப்பதற்கு தேவையான திட்டம் மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்படும் என்றும், நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

9. மேற்குறிப்பிட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் குறிப்புரை மற்றும் ரிட் மனு எண்.19388/2006 மற்றும் 7243/2007 ஆகியவற்றின் மீது 22.07.2009ல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு திண்டிவனம் நகராட்சிக்கு புதிதாக பேருந்து நிலையம் அமையவுள்ள இடம் குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்ததில், திண்டிவனம் ஏரியில் அமைந்துள்ள 6 ஏக்கர் நிலத்தில் பேருந்து நிலையம் அமைப்பதால் கீழ்க்கண்டவாறான சாதகங்கள் உள்ளன என்று கருதப்படுகிறது.

1. இவ்விடம் நகராட்சி வசம் உள்ளது. ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை. எனவே எவ்வித சிரமமுமின்றி பேருந்து நிலையம் அமைக்க இயலும்.

2. இவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைப்பதால், நகராட்சிக்கு வருவாய் வரும் வாய்ப்புகள் உள்ளன. மேலும் நிலத்திற்கு தொகை செலுத்தி சொந்தமாக வாங்கப்பட்டுள்ளதால் நகராட்சிக்கு புதிய மூலதனச் செலவினம் மற்றும் தொடர் செலவினம் ஏற்படாது.

3. இவ்விடம் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் உள்ளதால் பேருந்துகளை இயக்க எளிதாக இருக்கும்.

4. நீர்நிலை புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்ய விதிக்கப்பட்டுள்ள தடைக்கு விலக்களிக்கப்பட்டு இவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைக்க ஏற்கனவே அரசாணை (நிலை) எண்.101, வருவாய்த்துறை, நாள் 05.03.2001–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

5. தற்போதைய நகராட்சி ஆணையர், வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர் இவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைக்க பரிந்துரைத்துள்ளனர். குறிப்பாக வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வக்பு வாரிய இடம் மற்றும் திண்டிவனம் ஏரியில் பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் ஆகியவற்றை 07.08.2009–ல் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, இன்றைய நிலையில், திண்டிவனம் ஏரி நிலத்தில் பேருந்து நிலையம் அமைப்பது உசிதமாக அமையும் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

6. இந்த ஏரி தற்போது குறைந்தளவு பாசனத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மேலும், இந்த ஏரியின் பாசனப் பகுதிகள் குடியிருப்பு பகுதிகளாக மாறி வருவதால் இந்த ஏரியின் பாசனத்திற்கான பயன்பாடு குறைந்து கொண்டே வருகிறது.

7. பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு விழுப்புரம் வட்டம், முண்டியம்பாக்கம் ஏரியில் சென்னை உயர் நீதிமன்ற அனுமதியுடன் 18.20.0 ஹெக்டர் நிலத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. இதனை முன் உதாரணமாக கொண்டு பொதுமக்கள் நலன் கருதி நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்காவண்ணம் நகராட்சி வசம் உள்ள திண்டிவனம் ஏரியில் அமைந்துள்ள நிலத்தினை புதிய பேருந்து நிலையம் அமைக்க பயன்படுத்திக் கொள்ளலாம்.

8. திண்டிவனம் நகர்மன்றம் தீர்மானம் எண்.671, நாள் 13.06.2006–ல் திண்டிவனம் ஏரிப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கலாம் என்றும், வக்பு வாரிய நிலத்தினை குத்தகைக்கு பெற்று பேருந்து நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.136, ந.நி.(ம) கு.வ. துறை, நாள் 15.09.2005–ஐ ரத்து செய்யக் கோரலாம் என்று தீர்மானித்துள்ளது.

வக்பு வாரிய நிலத்தில் பேருந்து நிலையம் அமைத்தால் கீழ்க்கண்டவாறான பாதகங்கள் உள்ளன எனறு கருதப்படுகிறது.

1. இந்நிலத்தில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. அவைகள் நகராட்சி செலவிலே அகற்றப்பட வேண்டும். இதனால் நகராட்சிக்கு கூடுதல் செலவு ஏற்பட்டு, நிதிச்சுமை கூடும்.

2. முன்பணமாக ரூ.6,00,000/–மும், மாத வாடகையாக ரூ.60,000/–மும் கொடுத்து குத்தகை அடிப்படையில் இந்நிலத்தை பெற்று பேருந்து நிலையம் அமைப்பதால் நகராட்சிக்கு தொடர் செலவினம் ஏற்படுமே தவிர நகராட்சிக்கு வருவாய் ஏற்பட வழிவகை இல்லை. வக்பு வாரியத்தின் பெயரிலேயே நிலம் உள்ளதால் அதில் நகராட்சி செலவில் கட்டுமான பணிகளை பெரிய அளவில் மேற்கொள்வதிலும், விரிவுபடுத்துவதிலும் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. குத்தகை நிலத்தில் இவ்வாறு சொந்த கட்டிடம் கட்ட செலவு செய்வது தவிர்க்கப்பட வேண்டியதாகும். மேலும் வக்பு வாரியத்துடன் நகராட்சி ஆணையர் 22.12.2005ல் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் நகராட்சி நிர்வாக ஆணையரின் அறிவுரைப்படியோ அல்லது நகர்மன்ற ஒப்புதலை பெற்றோ செய்யப்படவில்லை. அதன்படி நகராட்சி வருடத்திற்கு ஒரு முறை ஐந்து சதவிகிதம் வாடகை உயர்வும் ஒவ்வொரு குத்தகை நீட்டிப்பிற்கு 6 மாதத்திற்கு முன்பே குத்தகைக்கான முன்பணம் குறித்து வக்பு வாரியத்தை அணுகவும், வாரியம் நிர்ணயிக்கும் கூடுதல் முன்பணத்தை செலுத்தவும் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தால் நகராட்சிக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படும்.

3. இந்நிலம் புதிதாக அமைக்கப்பட்ட சென்னை – திண்டிவனம் – திருச்சி புறவழிச்சாலைக்கு மேற்கில் மைலம் சாலையில் நகரின் பிரதான பகுதியில் அமைந்துள்ளது. எனவே, இவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைத்தால் புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலைக்கு செல்வதற்கு சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பேருந்து நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையில் மேலும் காலதாமதம் ஏற்படும். அவ்வாறு நில ஆர்ஜிதம் செய்து தேசிய நெடுஞ்சாலைக்கு சாலை அமைத்தாலும், வக்பு வாரிய இடத்தை சுற்றி குடியிருப்பு பகுதிகள் நிறைந்துள்ளதால் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படும்.

4. இந்நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புதாரர்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தும்போது அவர்கள் நீதிமன்றம் செல்ல வாய்ப்புகள் உள்ளதால் பேருந்து நிலையம் அமைப்பது தாமதமாவதுடன், நகராட்சிக்கு மிகுந்த பணிச்சுமை மற்றும் நிதிச்சுமை ஏற்படும்.

10. மேற்கண்ட காரணங்கள் மற்றும் பொதுநலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, வக்பு வாரியத்திற்கு சொந்தமான நிலத்தினை குத்தகைக்கு பெற்று திண்டிவனத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.136, ந.நி. (ம) கு.வ. துறை, நாள் 15.09.2005–ஐயும், மேலும், இவ்விடத்தில் ரூ.522.00/– இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.19, ந.நி.(ம) கு.வ. துறை, நாள் 17.02.2006–ஐயும் ரத்து செய்தும் திண்டிவனம் ஏரிப் பகுதியில் சர்வே எண்.33/4 மற்றும் 36/5ல் அமைந்துள்ள 5 ஏக்கர் நிலப்பகுதி மற்றும் ஒரு ஏக்கர் தோப்பு புறம்போக்கு நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது சிறந்ததாக இருக்கும் என்றும் கருதி, அரசாணை (நிலை) எண்.101, வருவாய்த்துறை, நாள் 05.03.2001–ல் வெளியிடப்பட்ட ஆணைகளை உறுதி செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், அனைத்து வகையிலும் பொருத்தமான திண்டிவனம் ஏரிப்பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் / திண்டிவனம் நகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் மாவட்டம்.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர்.
வருவாய் கோட்டாட்சியர், திண்டிவனம்.
நகராட்சி ஆணையர், திண்டிவனம் நகராட்சி.
முதன்மை செயல் அலுவலர், வக்பு வாரியம், சென்னை.
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலர், நிதித்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறை, சென்னை–9.
செயலரின் தனிச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

த.பி.பா.